. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...


# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936


வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 31.07.2026 • மலர் 04 • இதழ்: 212 • வெள்ளி • Edition : Nagercoil • 31.07.2026 • Vol : 04 • Issue : 212 • Page : 4 • Rs. 5/-

# சென்னையில் ஆஸ்திரேலிய பல்கலைக்கழக வளாகம்

## முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்




சென்னை:
ஜூலை. 31

ஆஸ்திரேலியாவின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றான மேற்கு ஆஸ்திரேலியா பல்கலைக்கழகம், இந்தியாவில் தனது வளாகத்தை சென்னையில் நிறுவ உள்ளது. இது தமிழ்நாட்டில் அமையவுள்ள முதல் சர்வதேசப் பல்கலைக்கழக வளாகமாகும். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் விஜய் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழ்நாடு முதல்வர் விஜய் முன்னிலையில், உலகளாவிய திறன் மையங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், உற்பத்தி திட்டம் மற்றும் தமிழ்நாட்டின் முதல் சர்வதேசப் பல்கலைக்கழக வளாகத்தை நிறுவுவதற்காக முன்னணி உலகளாவிய நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

சென்னை நந்தனத்தில் உள்ள வழிகாட்டி நிறுவனத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சப் (Chubb) நிறுவனம், தனது உலகளாவிய திறன் மையம் மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த நார்டெக்ஸ் (Nordex) நிறுவனம், தனது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் ஆகியவற்றை தமிழ்நாட்டில் முதன்முறையாக நிறுவ முன்வந்துள்ளன. சப் நிறுவனம் அமைக்கவுள்ள மையத்தின் மூலம் 220 பேருக்கும், நார்டெக்ஸ் நிறுவனம் அமைக்கவுள்ள மையத்தின்மூலம் 1,000 பேருக்கும் வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விரு நிறுவனங்களின் முதலீடுகள் மூலம் மொத்தம் 1,220 உயர்தர ஊதியம் வழங்கும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படவுள்ளன.

இந்த முதலீடுகள், உயர்மதிப்புடைய உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான முக்கிய சர்வதேச மையமாக சென்னை நகரின் நிலையை மேலும் வலுப்படுத்தும். புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தல், அறிவு சார் திறன் சார்ந்த முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் திறன்மிக்க மனிதவளத்திற்கு உயர்தர வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற முதல்வர் விஜய்தலைமையிலான அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்றாற்போல், இம்முதலீடுகள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், உயர்கல்வித் துறையில், ஆஸ்திரேலியாவின் முன்னணி ஆராய்ச்சி சார்ந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான மேற்கு ஆஸ்திரேலியாபல்கலைக்கழகம், இந்தியாவில் தனது வளாகத்தை சென்னை நகரில் நிறுவ உள்ளது. இது தமிழ்நாட்டில் அமையவுள்ள முதல் சர்வதேசப் பல்கலைக்கழக வளாகமாகும். 1911 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தப் பல்கலைக்கழகம், QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2026இல் 77 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

சென்னை வேளச்சேரியில் சுமார் ரூ.125 கோடி முதலீட்டில் இப்பல்கலைக்கழகம் உருவாக்கப்பட உள்ளது.

இதன்மூலம் 200க்கும் மேற்பட்டோருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்துறை அமைச்சர் கடந்த ஜூன் 2026இல் தென் கொரியாவிற்குமேற்கொண்ட பயணத்தின் தொடர்ச்சியாக, அந்நாட்டின் முன்னணி வாகன உதிரிபாக உற்பத்தி நிறுவனமான மோட்டிவ்லிங்க் (Motive Link), காஞ்சிபுரம் மாவட்டம் சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காவில் ரூ.300 கோடி முதலீட்டில் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம் 1,500 பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாகும்.


இந்த முதலீடுகள், தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதோடு, உலகளாவிய திறன் மையங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உயர்கல்வி மற்றும் மேம்பட்ட உற்பத்தித் துறைகளுக்கான உலகளாவிய மையமாக தமிழ்நாட்டை நிலை நிறுத்துவதில் முக்கியப் பங்காற்றும் என்று முதல்வர் விஜய் தெரிவித்தார். மேலும், இந்நிறுவனங்களின் முதலீடுகளை எளிதாக்குவதற்கும், அவற்றின் செயல்பாடுகள் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக அமைய தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இந்நிகழ்ச்சியில், தொழில் துறை அமைச்சர் செல்வி எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாகர்கோவில் சிறையில் சபரி வர்மன் கொலை செய்யப்பட்டது எப்படி?

## சிபிசிஐடி விசாரணையில் அதிர்ச்சி தகவல்



நாகர்கோவில்,
ஜூலை. 31

கன்னியாகுமரி அருகே ஈத்தங்காடு பகு2தியை சேர்ந்தவர் சபரிவர்மன் (34). மாற்றுத்திறனாளியான இவர் நாகர்கோவில் சிறையில் அடித்து கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கை தற்போது சிபிசிஐடி போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

இதைத்தொடர்ந்து சிபிசிஐடி எஸ் பி ஷாஜிதா சிறைச்சாலையில் சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக விசாரணை நடத்தினார்.

இந்த வழக்கில் சிறை வார்டன் ஜெகன், தலைமை வார்டன் சுரேஷ், சிறை காவலர் சிவகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டு நாங்குநேரி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடமும் சிபிசிஐடி டிஎஸ்பி ராஜ்குமார் நாகராஜ் தலைமையில் விசாரணை நடைபெற்றது. இது தவிர 8 கைதிகள் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் சிபிசிஐடி இன்ஸ்பெக்டர் மரிய பிரான்சிஸ்கோ தலைமையிலான போலீசார் விசாரித்தனர்.

சிறையில் அடைக்கப்பட்ட சபரி வர்மன் கட்டி வைத்து தாக்கப்பட்டு இறந்திருப்பது பிரேத பரிசோதனையில் தெரிய வந்தது. அவரது உடலில் 19 இடங்களில் காயங்கள் இருந்தன.

இந்த நிலையில் தற்போது நடந்த விசாரணையில், சம்பவம் நடந்த இரவு சபரிவர்மன் சிறையில் இருந்து மனைவி குழந்தைகளை பார்க்க செல்ல வேண்டும் என்று சத்தம் போட்டு இருக்கிறார். அப்போது பணியில் இருந்த சிறை வார்டனிடம் மற்ற கைதிகள் புகார் தெரிவிக்கவே அவர் வந்து தாக்கியுள்ளார்.

இந்த நிலையில் சபரி வர்மனை தாக்கிய மற்ற 8கைதிகளும் அன்று சமையல் வேலை முடித்துவிட்டு வந்துள்ளனர். அப்போது சவரிவர்மன் தொடர்ந்து வீட்டிற்கு செல்ல வேண்டும் என சத்தம் போட்டு உள்ளார். பின்னர் எட்டு கைதிகளும் புகார் செய்து விட்டு, வார்டன் தூண்டுதலின் பேரில் சவுரிவர்மனை தாக்கியுள்ளனர்.

ஒரு கட்டத்தில் அவர்கள் சபரி வர்மனை அவர் கட்டியிருந்த லுங்கியால் இரண்டு கைகளையும் கட்டி வைத்து தாக்கியுள்ளனர். ஆனால் சபரி வருமன் கையில் கட்டி இருந்த லுங்கியை அவிழ்த்து இருக்கிறார். இதனால் ஆத்திரம் அடைந்த கைதிகள் லுங்கியை கிழித்து மீண்டும் கட்டி வைத்து தாக்கியுள்ளனர். பலமாக தாக்கிய நிலையில் அவர் இறந்து இருப்பது போலீசாரணையில் தெரிய வந்துள்ளது.



மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி, அவர்கள் இன்று வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம், பனமடங்கி அரசு மேல்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.197.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 வகுப்பறைகள் கொண்ட கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லீலாஅலெக்ஸ், இ.ஆ.ப., காட்பாடி சட்டமன்ற உறுப்பினர்.மரு.ம.சுதாகர், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் .மு.ம.வினோத் கண்ணன், கீ.வ.குப்பம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.தென்றல்குமார், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் க.சிந்து, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பா.ஜெயசுதா (மு.கூ.பொ), மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆர்.பிரேமலதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# விபத்தில்லா குமரி : சாலை பாதுகாப்பு கலந்தாய்வு கூட்டத்தில் கலெக்டர் அறிவுறுத்தல்

நாகர்கோவில்,
ஜூலை. 31

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் சாலை பாதுகாப்பு மற்றும் விபத்து தடுப்பு நடவடிக்கைகள் குறித்து துறை அலுவலர்களுடனான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.ஸ்டாலின் முன்னிலை வகித்தார். துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்ட பின் கலெக்டர் கூறியதாவது :

சாலை பாதுகாப்பு மற்றும் விபத்து தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாதாந்தோறும் கன்னியாகுமரி மாவட்ட சாலை பாதுகாப்பு குழு ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் ஜூலை மாதம் வாகன விபத்துக்களால் ஏற்பட்ட இறப்புகள்குறித்து ஆராய்ந்தபோது குறிப்பாக மது போதை மற்றும் அதிவேகமாக வாகனம் ஓட்டியதாலும், ஹெல்மெட் அணியாததாலும் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது.


விபத்து பகுதிகளில் நெடுஞ்சாலைத்துறை, உள்ளாட்சித்துறை, வட்டார போக்குவரத்துறை மற்றும் காவல்துறை சார்பில் எச்சரிக்கை பலகைகள், விழிப்புணர்வு பலகைகள், வேக கட்டுப்பாடு பலகைகள் மற்றும் சாலையோர போக்குவரத்து சின்னங்கள் வைத்திடவும் சாலைகளில் தேவையான வெள்ளை நிற கோடுகள் மற்றும் மஞ்சள் நிற மையக்கோடுகள், வெள்ளை வேகக்கட்டுபாடு கோடுகள் அமைத்தல், சாலைகளின் நடுவில் தேவையான மையத்தடுப்பான்கள் ஏற்படுத்துதல், மரங்கள் மற்றும் மின்கம்பங்களில் ஒளிரும் பட்டைகள் அமைத்தல் போன்ற சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு தொடர்ச்சியாக கண்காணித்திட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. குறிப்பாக 18 வயதிற்கு கீழ் உள்ள சிறுவர், சிறுமியர் வாகனங்கள் ஓட்டுவதை தவிர்க்க வேண்டும். இதனை பெற்றோர் கண்காணித்திட வேண்டும். தவறினால் பெற்றோர் மீது காவல்துறை மூலம் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். சாலை விபத்தில்லா குமரி மாவட்டம் உருவாக்கிட பொதுமக்கள் சாலை பாதுகாப்பு விதிகளை முறையாக பின்பற்றி முழு ஒத்துழைப்பு நல்கிட கேட்டுக்கொள்ளப்பட்டது. மாவட்டத்தில் சாலை விபத்துகளை முற்றிலுமாகத் தடுப்பதற்கும், விபத்து ஏற்படா வண்ணம் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்துவதற்கும் அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு கூறினார்.

நடைபெற்றகூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வேலுமணி, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஐஸ்வர்யா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் எஸ். காளீஸ்வரி, துறை அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள், போக்குவரத்து காவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# நாகர்கோவிலில் ரயில்வே ஊழியர் வீட்டில் 14 பவுன் நகைகள், பணம் கொள்ளை!

நாகர்கோவில்,
ஜூலை. 31

நாகர்கோவில் கோட்டாறு ரயில்வே குடியிருப்பில் வசிப்பவர் பாலுச்சாமி. ரயில்வே துறை ஊழியரான இவரது சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம் சாத்தூர் பகுதியாகும். தற்போது மனைவி மேனகா (43) மற்றும் குடும்பத்துடன் வசித்து வருகிறார். நேற்று முன்தினம் காலை பாலுச்சாமி வேலைக்கு சென்று விட்டார். வீட்டில் அவர் மனைவி மேனகா மட்டும் இருந்துள்ளார். வீட்டில் தனியாக இருந்த மேனகா வீட்டை பூட்டி விட்டு வடிவீஸ்வரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றுள்ளார். சிறு நேரத்தில் அவர் வீடு திரும்பிய போது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டு கிடந்தது.



அவர் உள்ளே சென்று பார்த்த போது பீரோவில் இருந்த 14 பவுன் தங்க நகைகள் மற்றும் வெள்ளி கொலுசு மேலும் ரூ. 2500 ரொக்கப்பணம் ஆகியவை கொள்ளை போயிருந்தது தெரிய வந்தது.

உடனடியாக இது குறித்து கோட்டாறு போலீசருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடம் சென்று விசாரணை நடத்தினர். கைரேகை நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு வீட்டில் பதிவாகியிருந்த தடயங்களை பதிவு செய்தனர். அப்போது ஒரு கைரேகை சிக்கியது.

மேலும் அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை கைப்பற்றி போலீசார் ஆய்வு செய்தனர். அதில் பதிவான காட்சிகளை வைத்தும் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து மேனகாவின் புகாரின்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேனகா ஆஸ்பத்திரி செல்வதை நோட்டம் விட்டு திருடர்கள் கைவரிசை காட்டி உள்ளதாக போலீசார் சந்தேகிக்கின்றனர். அவர் ஆஸ்பத்திரிக்கு சென்று விட்டு 45 நிமிடத்தில் வீட்டிற்கு திரும்பி உள்ளார். அதற்குள் கொள்ளையர்கள் இந்த சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# நாகர்கோவிலில் சாமியார் வேடத்தில் வந்து பெண்ணின் முகத்தில் மயக்க பொடி தூவி திருடிய மர்ம நபர்கள்

நாகர்கோவில்,
ஜூலை. 31

நாகர்கோவில் கோட்டார் அன்பு நகர் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் ஒரு பெண் தனியாக இருந்தார். அப்போது அந்த வீட்டிற்கு காவி வேட்டி அணிந்து கொண்டு 3 சாமியார்கள் வந்து உள்ளனர். அவர்கள் ஒரு கோவிலில் இருந்து வருவதாக கூறி மேலும் அந்தப் பெண்ணிடம் குடிப்பதற்கு தண்ணீர் தருமாறு கேட்டுள்ளனர். அந்தப் பெண் அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்காக வீட்டிற்குள் சென்று உள்ளார். அப்போது அந்த 3 பேரும் பெண்ணிடம் உங்கள் வீட்டில் தீய சக்தி உள்ளது அதனை போக்க மஞ்சள்தண்ணீர்கொண்டு வாருங்கள் என்று கூறியுள்ளனர்.

அவர்களின் பேச்சை நம்பிய பெண் மஞ்சள் தண்ணீரை கொண்டு வந்து கொடுத்துள்ளார். அதனை வாங்கியவர்கள் மஞ்சள் தண்ணீரை பெண்ணின் முகத்தில் தளித்துள்ளனர். மேலும் மறைத்து வைத்திருந்த மயக்க பொடியை பெண்ணின் முகத்தில் போட்டனர். இதில் அந்த பெண் மயக்கம் அடைந்து கீழே விழுந்துள்ளார்.

உடனே அந்த 3 பேரும் வீட்டில் புகுந்து அங்கிருந்து ஒரு சிறிய வெள்ளி சிலையை எடுத்துக் கொண்டு மின்னல் வேகத்தில் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர். மயக்கம் தெளிந்து அந்தப் பெண் எழுந்த போது, வந்தது சாமியார்கள் அல்ல திருடர்கள் என்பது தெரிந்து, கோட்டாறு போலீசருக்கு தகவல் தெரிவித்தார்.

போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். மேலும் அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். அப்போது சாமியார் வேடம் அணிந்து 2 பேர் செல்வது போன்ற காட்சிகள் பதிவாகி இருந்தது. அதன் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்து தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.

குமரி மாவட்டத்தில் இது போன்ற சம்பவங்கள் தற்போது அதிகரித்து வருகிறது. இதனால் வீடுகளில் தெரியாத நபர்களை அனுமதிக்க வேண்டாம் என காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.



ஈரோடு மாவட்ட முன்னாள் படைவீரர் அலுவலகத்தில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் சரத்குமார் நேற்று கள ஆய்வு மேற்கொண்டார்.

# கோட்டநத்தம் ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி திருக்கோவில் ஆடி மாத கொடை விழா

## அரிவாள் மேல் ஏறி நின்று அருள்வாக்கு கூறிய பூசாரி

விளாத்திகுளம் ஜூலை 31.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள கோட்டநத்தம் கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஶ்ரீ பதினெட்டாம்படி கருப்பண்ண சாமி திருக்கோவிலில் ஆடி மாத கொடை விழாவை முன்னிட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் ஏராளமான பக்தர்கள் பொங்கல் வைத்து வழிபட்டு மேளதாளங்கள் முழங்க பூக்குழி இறங்கி தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர். மேலும் கொடை விழாவை முன்னிட்டு ஸ்ரீ கள்ளழகர் மற்றும் ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பண்ணசாமிக்கு பல்வேறு திரவியங்களால் அபிஷேகங்கள் மற்றும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை



காட்டப்பட்டது. இதைத்தொடர்ந்து இக்கோவிலின் முக்கிய நிகழ்வாக கருதப்படும் கோவில் பூசாரி அழகர் சாமி அரிவாள் மேல் ஏறி நின்று அருள்வாக்கு கூறும் நிகழ்வு நடைபெற்றது. இதில் பக்தர்களுக்கு அரிவாள் மீது ஏறி நின்று அருள்வாக்கு கூறி அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.

குறிப்பாக இந்நிகழ்வை காண வேண்டும் என்பதற்காக விளாத்திகுளம் பகுதி மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு வந்து பூக்குழி இறங்குதல் மற்றும் அரிவாள் மேல் ஏறி நின்று அருள்வாக்கு கூறும் நிகழ்வினை கண்டு பக்தி பரவசமடைந்து,

மிகவும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பணசாமியை தரிசனம் செய்து கோவிலில் நடைபெற்ற அறுசுவை அன்னதானத்தில் உணவருந்தி சென்றனர்.

# வேலூரில் அமைச்சர் விஜய் பாலாஜி சுமார் ரூ.87 லட்சம் மதிப்பிலான புதிய வகுப்பறை கட்டிடங்கள் திறந்து வைத்தார்



வேலூர், ஜூலை 31

வேலூர்மாவட்டம்,சின்ன அல்லாபுரத்தில் மாநகராட்சி தொடக்கப்பள்ளி கூடுதல் வகுப்பறைகள் ரூ.87 லட்சம் மதிப்பிலான புதிய கட்டிடத்தினை மாவட்ட ஆட்சியர் லீலா அலெக்ஸ் தலைமையில் தமிழக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் விஜய் பாலாஜி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார் இதில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் சுகுமார்,காட்பாடி சட்டமன்ற உறுப்பினர் சுதாகர்.வேலூர் சட்டமன்ற உறுப்பினர் வினோத் கண்ணா,குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் சிந்து,உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முதன்மை கல்வி அலுவலர் பிரேமலதா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர் இங்கு மரக்கன்றினையும் அமைச்சர் விஜய்பாலாஜி நட்டார்

இதே போன்று சேண்பாக்கம் புகழ் பெற்ற செல்வ விநாயகர் ஆலயத்தில் ரூ.70 லட்சம் மதிப்பிலான ஆலய அன்னதான கூடத்திற்கும் அமைச்சர் விஜய் பாலாஜி பூமி பூஜை செய்தார் இதில் அறங்காவல் குழு உறுப்பினர்கள் சேண்பாக்கம் பொதுமக்கள் திரளானோர் கலந்துகொண்டனர் இதே போன்று வேலூர் பெண்ட்லேண்ட் அரசு மருத்துவமனையில் ரூ.33 லட்சம் மதிப்பிலான மாற்றுத்திறனாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் மறுவாழ்வு சேவை மையத்தினையும் அமைச்சர் துவங்கி வைத்தார்

# வாணியம்பாடியில் மின்மாற்றி அருகே தேங்கிய தண்ணீரில் மின்சாரம் பாய்ந்து ஆடு பலி...

வாணியம்பாடி, ஜூலை.30

திருப்பத்தூர் மாவட்டம்வாணியம்பாடி ஆற்று மேடு பகுதியில் உள்ள தனியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அருகே மின்சாரம் தாக்கி ஆடு உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அப்பகுதியில் உள்ள மின்மாற்றியில் ஏற்பட்ட பழுதை மின்வாரிய ஊழியர்கள் மூன்று நாட்களுக்கு முன்பு சீரமைத்திருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இன்று மின்மாற்றி அருகே தேங்கி நின்றிருந்த தண்ணீரை குடிக்கச் சென்ற



ஆடு, மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.

மின் மாற்றி பழுது சரிசெய்யப்பட்ட பின்னரும் முறையான எர்த் இணைப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால், தேங்கியிருந்த தண்ணீரில் மின்சாரம் பாய்ந்ததாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டினர்.

இந்த சம்பவத்தில் மனித உயிருக்கு எந்த பாதிப்பும் ஏற்படாதது அதிர்ஷ்டவசமாக இருந்தாலும், இதேபோன்ற அசம்பாவிதங்கள் ஏற்படாமல்இருக்கமின்வாரிய அதிகாரிகள் உடனடியாக ஆய்வுசெய்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பொது விநியோகத் திட்டத்திற்கு நெல் அரவை முகவர்கள் தரமான அரிசியை உற்பத்தி செய்து வழங்க வேண்டும்

## ஆட்சியர் சரவணன் அறிவுறுத்தல்

தருமபுரி ஜூலை 31

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக தருமபுரி மண்டலம் மற்றும் பொது விநியோகத் திட்ட பணிகள் குறித்து ஆட்சியர் சரவணன் ஆய்வு செய்தார். மாரவாடி பகுதியில் திறந்த வெளி நெல் சேமிப்பு மையத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் நெல் சேமிப்பு மையத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள 10, 437 மெட்ரிக் டன் நெல் முட்டைகள் மழைக்காலங்களில் நனையா வண்ணம் பாதுகாக்க வேண்டும். மழை நீர் வடியும் வண்ணம் வடிகால்அமைக்கவேண்டும். நெல் மூட்டைகளை பூச்சிகள் தாக்காமல் இருக்க வேண்டும். காற்றோட்



டத்துடன் வைக்க வேண்டும். 24 மணி நேரமும் காவலர்கள் பணியில் இருப்பது அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். நெல் சேமிப்பு மையப்பதிவேடுகளை மைய பொறுப்பாளர்கள் முறையாக பராமரிக்க வேண்டும் என்று ஆட்சியர் கூறினார்.

இந்த ஆய்வின்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாளர் துரைசாமி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்

## அகஸ்தீஸ்வரம் அருகே

# தனியார் மதுபான பாரில் தொழிலாளி சாவு

கன்னியாகுமரி, ஜூலை 31

கேரளம் மாநிலம் திருவனந்தபுரம் பனகப் பாறை பகுதியை சேர்ந்தவர் சுரேஷ் குமார் (வயது58). இவரது மனைவிபிந்து(வயது48). இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். குடும்ப பிரச்சினை காரணமாக கணவன்மனைவி இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். இந்நிலையில்சுரேஷ் குமார் குமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் பகுதியில் உள்ள ஒரு தனியார் மதுபான பாரில் வேலை பார்த்து வந்தார். சம்பவத்தன்று அந்த பாரில் உள்ள கழிவறையில் சுரேஷ்குமார் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார். ஊழியர்கள் உடனடியாக அவரை மீட்டு, ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள். சுரேஷ்குமார் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தென்தாமரைகுளம் போலீஸ் நிலையத்திற்குதகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். சுரேஷ்குமார் இறந்தது தொடர்பாக அவரது மனைவி பிந்து கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர்.

# ஈரோடு நொச்சிக்காட்டு வலசு வெள்ளைப் பாறை முனியப்பசாமி கோவில் விழா 5 ந் தேதி தொடக்கம்

ஈரோடு ஜூலை 30

ஈரோடு மொடக்குறிச்சி 46 புதூர் ஊராட்சி நொச்சிக்காட்டு வலசில் புகழ் பெற்ற வெள்ளைப்பாறை முனியப்பசாமி சாமி கோவில் உள்ளது. ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் வகையறா கோவில்களின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோவிலில் ஆண்டுதோறும் பொங்கல் விழா மிக சிறப்பாக நடப்பது வழக்கம்.

இதேபோல் இந்த ஆண்டும் பொங்கல் விழா வருகிற 5 ந் தேதி தொடங்குகிறது.

இதையொட்டி 4 ந் தேதி மாலை 4 மணிக்கு காவிரி ஆற்றிக்கு சென்று தீர்த்தம் எடுத்து வரும் நிகழ்ச்சி நடக்கிறது.அன்று இரவு அன்னதானம் வழங்கப்படுகிறது.5 ந் தேதி அதி காலை முதல் பொங்கல் விழாவும் மாலை 6 மணிக்கு பெரும் பூஜையும் நடக்கிறது. 6 ந் தேதி மறு பூஜையுடன் விழா முடிவடைகிறது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் தக்கார் மற்றும் ஊர் பொது மக்கள் செய்து உள்ளனர்.

# சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவிலில் நேற்று காலை உதய அஸ்தமன பூஜை

சுசீந்திரம்.ஜீலை.31

சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவிலில் வருடம் தோறும் நல்ல மழை விவசாயம் செழிக்க வேண்டி தாணுமாலைய சுவாமிக்கும் திருவேங்கட விண்ணவப் பெருமாளுக்கும் ஆடி மாத களப பூஜை நடைபெறுவது வழக்கம் அதுபோல இந்த ஆண்டு ஆடி களபூஜையானது கடந்த 18ஆம் தேதி துவங்கியது தினந்தோறும் சுவாமிக்கு பன்னீர் பால் தயிர் சந்தனம் உட்பட்ட நறுமணப் பொருட்களால் அபிஷே



கம் நடைபெற்று வந்தது அதுபோல அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வைத்து சுவாமி அம்பாள் வாகனப் பவனி நடைபெற்றது களப பூஜை நிறைவு 13 ஆம் நாளான நேற்று காலை தாணுமாலய சுவாமி கோவில் உட்பிரகாரம் உள்ள விநாயகர் கோவிலுக்கு முன்பு உதய அஸ்தமனவேள்வி பூஜை நடைபெற்றது அதனைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட சுவாமிகளுக்கு சிறப்பு அலங்கார தீபாரதனையும் நடைபெற்றது இதில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் பக்தர்களும் பெரும்அளவுகலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து சென்றனர்

# ஸ்ரீரங்கம் கோபுரத்தில் ஷூவுடன் ஆய்வு நடத்திய அமைச்சர் ரமேஷ்-க்கு இந்து அமைப்பினர் கண்டனம்

பழனி கோவில் நில மோசடி விவகாரத்தை தொடர்ந்து தற்போது அமைச்சர் ரமேஷ் புதிய சர்ச்சையில்சிக்கியுள்ளார்.

திருச்சி ஸ்ரீ ரங்கம் ரங்கநாதர்கோவில்கிழக்குகோபுரத்தில் பராமரிப்பு பணிகள் நடந்து வரும் நிலையில் அதனை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஷூ அணிந்து கொண்டு ஆய்வு செய்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து பக்தர்கள் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர். இந்து அமைப்புகளும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்து சமய நம்பிக்கை மற்றும் உணர்வுகளை புண்படுத்தும் விதமாக காலில் ஷூ அணிந்து பார்வையிட்டதை கண்டிக்கிறோம் என்றும், பழனி கோயில் நில முறைகேடு உள்ளிட்ட காரணங்களால் அமைச்சர் ரமேஷ் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் எனவும் இந்து அமைப்புகள் தெரிவித்துள்ளன.

திருச்சி ஸ்ரீ ரங்கம் ரங்கநாதர்கோவில்கிழக்குகோபுரத்தில்பராமரிப்புவேலைகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை கடந்த சனிக்கிழமை அமைச்சர் ரமேஷ் நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது, ஸ்ரீரங்கம்கோவில்கிழக்கு கோபுரபகுதியில்,அமைச்சர் ரமேஷ் காலில் ஷூ அணிந்தபடி சென்று ஆய்வு செய்தார். கோவில் வளாகத்திற்குள் ஷூ அணிந்தபடி அமைச்சர் சென்ற காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வரும் நிலையில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

இது குறித்து பக்தர்கள் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர். இது தொடர்பாக பக்தர்கள் கூறும் போது, "பூலோக வைகுண்டம் என்று ஸ்ரீரங்கம் போற்றப்படுகிறது. புண்ணிய ஸ்தலமான ஸ்ரீரங்கம் கோவிலில் ஷூ' அணிந்தபடி அமைச்சர் ரமேஷ், கோபுர பராமரிப்பு பணிகளை ஆய்வு செய்து இருப்பது அதிர்ச்சியை தருகிறது. இந்த விவகாரம் குறித்து அமைச்சர் ரமேஷ் தனது விளக்கத்தை தர வேண்டும" என்று கூறியுள்ளனர்.

இதுகுறித்து வழக்கறிஞரும், இந்து திருக்கோயில்மீட்பு இயக்கம் நிறுவனர் மகேஸ்வரி வையாபுரி கூறுகையில், பூலோக வைகுண்டம் எனபோற்றப்படும் ஸ்ரீரங்கம் கோயில் மிகவும் புனிதமான ஸ்தலம். இக்கோயிலில் அமைச்சர் `ஷூ' அணிந்து கொண்டு கோபுர பராமரிப்பு பணிகளை ஆய்வு செய்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திருக்கின்றது.

ஸ்ரீரங்கம் பெருமாள் வீதி உலாவரும் திருவீதிச்சுற்றிலே கூட பெரியவர்கள் காலணி அணிந்து செல்ல மாட்டார்கள். இந்து சமய அறநிலைத்துறை அமைச்சருக்குஇதுகூடதெரியாதா? ஸ்ரீரங்கம் கோயிலின் கிழக்கு கோபுரத்தில் காலணி அணிந்து ஆய்வு செய்தது பக்தர்களின் மனதை புண்படுத்தியுள்ளது .

இதற்காகஅமைச்சர்பக்தர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இதுகுறித்து அமைச்சர் விளக்கமும் அளிக்க வேண்டும்' இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் கவனம் செலுத்த வேண்டும். நடைபெற்ற இந்த சம்பவத்திற்கு அமைச்சரை வன்மையாக கண்டிக்கிறோம் என்றார்.

இது குறித்து இந்து தமிழர் கட்சி தலைவர் ராம ரவிக்குமார், "அமைச்சார் ரமேஷ் மன்னிப்பு கேக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக ராம ரவிக்குமார் கூறுகையில், "ஸ்ரீரங்கம் ரங்கநாத சுவாமி திருக்கோயில் கிழக்கு கோபுரம் திருப்பணி பார்வையிடச் சென்ற இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் ஷூ அணிந்து கொண்டு கோபுரத்தில் ஏறியது கண்டனத்திற்குரியது.

ராஜனுக்கு ராஜனான ரங்கராஜனின் கிழக்கு கோபுரம் திருப்பணி பார்வையிட சென்ற இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் மற்றும் திருக்கோயில் அதிகாரிகள்தவெககட்சியினர்மற்றும் பலர் கை உயர்த்தி தொழும் ஸ்ரீரங்கம் ரங்கனின் கிழக்கு கோபுரத்தில் கிருஷ்ணர் சன்னதி அமைந்த இடத்திற்கு மேலே இந்து சமய நம்பிக்கையை கொச்சைப்படுத்தும் வகையில் மத உணர்வுகளை புண்படுத்தும் வகையில் அரசு அதிகாரத்தில்; அமைச்சர் என்ற ஆணவத்தில் காலில் ஷூ அணிந்து கொண்டு பார்வையிட சென்றது வன்மையான கண்டனத்திற்கு உரியது. கோடான கோடி மக்கள் வணங்கும் அரங்கனின் கோபுரத்தின் மீது ஷூ காலுடன்சென்று பார்வையிட்டது ஏற்றுக் கொள்ள இயலாதது வன்மையான கண்டனத்திற்குரியது.

அமைச்சர் பதவி என்பது ஐந்து ஆண்டுகள் தான் அதிகார மமதையில் இதற்கு முன்பு ஸ்ரீரங்கத்தில் இருந்த பல அமைச்சர்களின் வரலாறுகளை தற்போதைய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் .

கடவுள் இல்லை என்று சொல்லும் திராவிடர் கழகம் தலைவர் கி.வீரமணி அவர்கள் கூட செய்யத் துணியாத செயலை காலில் ஷூ அணிந்து கொண்டு பொறுப்பு மிக்க அமைச்சர் பதவியில் இருந்து கொண்டு செய்தது துளியும் ஏற்றுக் கொள்ள இயலாது .

ஸ்ரீரங்கம் அரங்கனின் வீதிகளில்காலில்செருப்பு அணியாது அரங்கனின் மீது பக்தி கொண்ட பல்லாயிரக்கணக்கான பாகவத பெரியவர்களின் பக்தி உயர்வானது.

அமைச்சர் என்ற அகங்காரத்தில் காலில் ஷூ அணிந்து பார்வையிட சென்றது நாளை யார் வேண்டுமானாலும்



கோயிலுக்குள் கூட செருப்பு அணிந்து செல்லலாம் என்ற தவறான முன்னுதாரணத்தை பொறுப்பு மிக்க அமைச்சர் செய்திருக்கிறார் .

இதற்கு இந்து சமய அறநிலை துறை அமைச்சர் ரமேஷ் பொதுவெளியில் மன்னிப்புக்கு கோர வேண்டும் . ஸ்ரீரங்கம் திருக்கோயில் நிர்வாகம் இது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் .

மன்னாண்ட மன்னவர்கள் பலரையும் மண்ணில் பார்த்து கிடந்த கோலத்தில் இருந்த இடத்திலிருந்து அரசாட்சி செய்யும் அரங்கனை விட இந்த அமைச்சர்ஒன்றும் பெரிய ஆள் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.



மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் செயல்பட்டு வரும் ஸ்மார்ட் வகுப்பறையை (Smart Class) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, ஸ்மார்ட் வகுப்பறையில் தொழில்நுட்ப வசதிகள் மூலம் மாணவிகளுக்கு வழங்கப்படும் கற்றல் முறைகள், பாடம் கற்பிக்கும் நடைமுறைகள் மற்றும் மாணவர்களின் கற்றல் ஈடுபாடு குறித்து ஆசிரியர்களிடம் கேட்டறிந்து, தகவல் தொழில்நுட்ப வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தி தரமான கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.




இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறுவதையொட்டி ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் முதன்மை மாவட்ட நீதிபதி எஸ்.சமீனா முன்னிலையில் நீதிமன்றத்தில் பணிபுரியும்அனைத்துஅலுவலர்கள்மற்றும்பணியாளர்களுக்குமக்கள்தொகைசுயகணக்கெடுப்பு தொடர்பான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.



# ஈரோட்டில் தொழிலதிபரிடம் ₹1.65 கோடி மோசடி: எஸ்பி அலுவலகத்தில் புகார்!

ஈரோடு ஜூலை 31

ஈரோடு சிதம்பரம் காலனி பகுதியைச் சேர்ந்த சி. எஸ். சிவகுமார் (பெஸ்ட் சிவகுமார்) என்பவர் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு ஒன்றை அளித்துள்ளார்.

மலேசியாவைச் சேர்ந்த தொழிலதிபர் வர்மன் என்பவரின் அதிகாரம் பெற்ற முகவராக (Power of Attorney) அளித்துள்ள புகாரில் கூறியிருப்பதாவது:

கடந்த 2019ஆம் ஆண்டு மலேசிய தொழிலதிபர் வர்மன் ஈரோட்டிற்கு வந்தபோது, துரைசாமி என்பவரின் மகனும் தற்போது மொடக்குறிச்சி தொகுதி தமிழக வெற்றிக் கழக சட்டமன்ற உறுப்பினருமான (MLA) சண்முகன் மற்றும் அவரது மகன் பிரதீப் ஆகியோர் அவரை அணுகியுள்ளனர். "M/s. Yes and Yes Constructions" என்ற பெயரில் கட்டிட கட்டுமானப் பொருட்கள் தயாரிப்பு தொழில் தொடங்குவதாகக் கூறி, ஈரோடு மேட்டூர் சாலையில் உள்ள தனியார் உணவகத்தில் வைத்து ஒப்பந்தம் செய்துள்ளனர்

. தொழிலதிபர் வர்மன் முதற்கட்டமாக ரூ.2 கோடியை அவர்களிடம் வழங்கியுள்ளார். பணத்தைப் பெற்றுக்கொண்ட சண்முகன் எந்தவொரு தொழிலும் தொடங்காமல் ஏமாற்றி வந்துள்ளார்.

இதுகுறித்து கேட்டபோது, தவணை முறையில் ரூ.35 லட்சத்தை மட்டும் திருப்பி அளித்துள்ளார். மீதமுள்ள பாக்கித் தொகையான ரூ.1,65,00,000/ (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து லட்சம்)ஐ செலுத்தாமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வந்துள்ளார்.

சமீபத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினரான சண்முகனிடம், நிலுவைத் தொகையைத் தருமாறு தொழிலதிபர் வர்மன் சார்பில் பெஸ்ட் சிவகுமார் தொடர்புகொண்டு கேட்டுள்ளார்.

அதற்கு சண்முகன், அதிகாரமிரட்டல் தோணியில் கொலை மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படுகிறது.

எனவே, ரூ.1.65 கோடி பணத்தை ஏமாற்றி மோசடி செய்த மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சண்முகன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து, பணத்தை மீட்டுத்தர வேண்டும் என அந்தப் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தக்கலை அருகே கால்வாயில் மூழ்கி தொழிலாளி உயிரிழப்பு

தக்கலை, ஜூலை. 31

தக்கலை அருகே உள்ள மருந்துகோட்டை என்ற பகுதியை சேர்ந்தவர் வின்சென்ட் மகன் ஆல்வின் சஜின் (36) தொழிலாளி. இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நேற்று முன்தினம் மதியம் வீட்டில் இருந்த ஆல்வின் சஜின் குளிப்பதற்காக அந்த பகுதியில் உள்ள கால்வாய்க் கரைக்கு சென்றுள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக நிலைதடுமாறி கால்வாயின் உள்ளே விழுந்துள்ளார். அதன் பிறகு அவர் வெளியே வராததால் அங்கிருந்தவர்கள் தண்ணீரில் தேடினர்.

இந்த நிலையில் நீரில் மூழ்கிய ஆல்வின் சஜின் அங்குள்ள ஒரு தடுப்பு அருகே கிடப்பது தெரியவர, பொதுமக்கள் மீட்டு தக்கலை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த அங்கு பின்னர் அங்கிருந்து குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு டாக்டர்கள் பரிசோதித்த விட்டு ஆல்வின் சஜின் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து அவரது தந்தை வின்சென்ட் அளித்த புகாரின் பேரில் தக்கலை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கோவையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான தற்காப்பு கலை போட்டி




கோவை ஜூலை:31

கோவை தொண்டாமுத்தூர் தெற்கு ஒன்றிய கலை மற்றும் கலாச்சார அணி சார்பாக கோவை செட்டிபாளையம் பகுதியில் மாவட்ட அளவிலான தற்காப்பு கலை போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியினை தொண்டாமுத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் விஜய் துவங்கி வைத்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களை வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார் .

இவருடன் இணைந்து தொண்டாமுத்தூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர்.

500 மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட இந்த போட்டியினை தி கோல்டன் ஸ்டார்ஸ் அகாடமி நிறுவனர் கலை மற்றும் கலாச்சார அணி ஒன்றிய அமைப்பாளர் சதீஸ் மற்றும் பயிற்சியாளர்கள் சேகர்,சபரீஷ்,பால மணிகண்டன் உள்ளிட்டோர் முன்னின்று நடத்தினர்.

# 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி எமதர்மன் வேடமிட்டு விவசாயிகள் நூதன ஆர்ப்பாட்டம்

. திருவண்ணாமலை ஜூலை 31

கடன் தள்ளுபடி உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி எமதர்மன் வேடமிட்டு தென்னிந்திய விவசாயிகள் சங்கத்தினர் நூதன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.



திருவண்ணாமலை அடுத்த வெறையூர் மத்திய கூட்டுறவு வங்கி கிளை முன்பு இன்று காலை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலத் துணைத் தலைவர் அ. எ. கிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் ரா.சுப்பிரமணி, மாநிலத் துணைத் தலைவர் சா. சந்தியாகு, மாநில செயலாளர் பா.ஜெயராமன், மாநில பொது குழு உறுப்பினர் மா.ராமசாமி, மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் தி . தங்கராஜ், ரா.வெங்கடேசன், இரா. சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைவரையும் ஒன்றிய பொதுக்குழு உறுப்பினர் அ. இளங்கோ வரவேற்றார். ஆர்ப்பாட்டத்தை சங்கத்தின் மாநிலத் தலைவர் முத்தகரம் பழனிசாமி துவக்கி வைத்தார். தேர்தல் அறிக்கையில் சொன்னது போல் சிறு குறு மற்றும் பெரு விவசாயிகளின் கூட்டுறவு பயிர் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும், விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய இடுபொருட்களின் விலையை குறைக்க வேண்டும், நெல் குவிண்டாலுக்கு 4 ஆயிரம் ரூபாயும், கரும்பு டன்னுக்கு 5 ஆயிரம் வழங்க வேண்டும், வெறையூர் பகுதியில் தீ அணைப்பு நிலையம் அமைக்க வேண்டும், வெறையூர் மற்றும் தி. வாளவெட்டி இடையில் துரிஞ்சல் ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டும் உள்பட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு தமிழக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் 2 விவசாயிகள் எமதர்மன், சித்திரகுப்தன் வேடமிட்டு விவசாயிகள் படும் வேதனைகளை நாடகம் மூலம் வெளிப்படுத்தியது அனைவரையும் கவர்ந்தது.முடிவில் ஒன்றிய அமைப்பாளர் ஆ.சக்திவேல் நன்றி கூறினார்.

# சுசீந்திரம் தாணு மாலய சுவாமி கோவிலில் பக்தர்கள் பாதுகாப்பு குறித்த ஆய்வு

சுசீந்திரம்.ஜீலை.31

தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றான தாணுமாலய சுவாமி கோவிலில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் வெளிநாட்டவர்களும் வந்து சுவாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம் இந்த கோவிலில் பக்தர்களுக்கு வசதியாக பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன இந்த ஏற்பாடுகள் சரியாக நடைபெறுகின்றதா என்பது குறித்தும் வருகின்ற பக்தர்களுக்கு பாதுகாப்பு வசதிகள் எப்படி உள்ளது கோவிலில் உள்ள சிசிடி கேமராக்கள் சரியாக இயங்குகின்றனவா என்பன குறித்து ஆய்வு செய்வதற்காக சென்னையில் இருந்து காவல் துறையினர் தீயணைப்பு துறையினர் மற்றும் இங்கு உள்ள பேரூராட்சி அலுவலர்கள் மின்சாரதுறையினர் உணவு பாதுகாப்பு துறையினர் கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட துறையில் உள்ள அரசு அதிகாரிகள் நேற்று காலை சுசீந்திரம் கோவிலுக்கு வருகை புரிந்து கோவில் உட்பிரகாரம் உள்ள உணவு சமையல் அறை மின்சாரம் சம்பந்தப் பட்டவைகள்சிசிடி கேமராக்கள் திடீரென தீப்பிடிப்பதற்கு ஏதாவது வாய்ப்புகள் இருக்கின்றதா அப்படி ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் தடுப்பதற்கு போதிய வசதிகள் உள்ளன என்பது குறித்தும் மற்றும் பக்தர்கள் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்து செல்வதற்கு போதிய வசதிகள் உள்ளனவா என்பன குறித்து ஆய்வு செய்தனர் இந்த ஆய்வில் கோவில்களின் இணை ஆணையர் ஜான்சி ராணி இணை ஆணையர் உதவியாளர் வெங்கடேஷ் கோவில் மேலாளர் ஜெயசுதா சுசீந்திரம் காவல் நிலைய ஆய்வாளர் அருள் பிரகாஷ் அரசு அதிகாரிகள் அரசு ஊழியர்கள் உடன் இருந்தனர்

# தஞ்சாவூர் மாவட்டத்தில் சுய வேலை வாய்ப்பு பயிற்சி இளைஞர்களுக்கு அழைப்பு

## கலெக்டர் ரேவதி தகவல்

தஞ்சாவூர் ஜூலை 31

தஞ்சாவூர்மாவட்டத்தில் சுயவேலைவாய்ப்புமூலம் சுய வேலைவாய்ப்பு பயிற்சி பெற இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்திருப்பதாவது :

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி துறை உதவியுடன் ஒவ்வொரு மாவட்டத் தில் முன்னோடி வங்கிகள் மூலம் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் நிர்வாகிக்கப்படு கின்றன

இதில் வேலை வாய்ப்புகளை அதிகம் வழங்கிடும் பயிற்சிகளான கைப்பேசி பழுது நீக்குதல் ,ஓட்டுநர் உரிமம் பயிற்சி, வீட்டு உபயோகப் பொருட்கள் பழுது நீக்குதல், கான்கிரீட், கொத்தனார் பயிற்சி, பிளம்பிங் பயிற்சி, தச்சு பயிற்சி, இருசக்கர வாகன பழுது நீக்குதல், ஒயரிங், வெல்டிங் பயிற்சி, போட்டோகிராபி, வீடியோ கிராபி, உள்பட 64 வகையான சுய வேலை வாய்ப்பு பயிற்சிகள் எவ்வித கட்டணமும் இல்லாமல் 15 வயது முதல் 45 வயதுக்குட்பட்ட கிராமப் புற இளைஞர்களுக்கு வழங்கப் படுகிறது கல்வித் தகுதியாக குறைந்தது 8ம் வகுப்பு படித்திருந்தால் போதுமானது கிராமப்புற இளைஞர்கள் தங்க ளுக்கு ஏற்றதொழில் பயிற்சிகளில் சேர்ந்து பயன்பெற விரும்பினால் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலைய இயக்குனர் ,ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம், எண் .4 பக்கிரி சாமி தெரு, ஈஸ்வரி நகர், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர்613004. (கைபேசி எண் 9080216079) (தொலைபேசி எண் 04362242377) மற்றும் இணை இயக்குனர் /திட்ட இயக்குனர், தமிழ்நாடு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகம், எண் 223 இரண்டாம் தளம் மாவட்ட ஆட்சியரகம் தஞ்சாவூர்613010. (கைபேசி என் 9444094368) தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்

# திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்தில் 5 கடைகளுக்கு சீல்; அதிரடி காட்டிய மாநகராட்சி

திருச்சிசத்திரம்பேருந்து நிலைய வளாகத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பேருந்து நிலையத்துடன் வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இந்த வணிக வளாகத்தில் சுமார் 30க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. இந்த கடைகள் ஒவ்வொன்றுக்கும் மாநகராட்சி சார்பில் ஒவ்வொரு மாதமும் வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.



இந்நிலையில் வணிக வளாகத்தில் உள்ள 5 கடை உரிமையாளர்கள் கடந்த சில மாத காலமாக தொடர்ந்து வாடகை கட்டாமல் இழுத்து அடித்து வந்தனர்.

இதனைத் தொடர்ந்து மாநகராட்சி சார்பில் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு முறையாக நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனால், நோட்டீஸ் அனுப்பப்பட்டும் கடை உரிமையாளர்கள் வாடகை பணத்தை கட்டாத காரணத்தால் இன்று மாநகராட்சி ஆணையர் உத்தரவின் பேரில் திருவரங்கம் உதவி கமிஷனர் சீனிவாசன் மேற்பார்வையில் மாநகராட்சி அதிகாரிகள் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் வணிகவளாகத்தில்உள்ள கடைகளில் வாடகை செலுத்தாத 5 கடைகளுக்கு சீல் வைத்து பூட்டினர். இதனால் சிறிது நேரம் சத்திரம் பேருந்து நிலையம் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.



# பாலக்கோடு அருகே 60 வீடுகளுக்கு 5 மாதங்களாக குடிநீர் இல்லை காலி குடங்களுடன் பெண்கள் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் மனு

தருமபுரி ஜூலை 31

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியத்திற்குட்பட்ட பி.செட்டிஅள்ளி ஊராட்சியில் உள்ள பொரத்தூர் காலனியில் 85க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில் 25 வீடுகளுக்கு மட்டுமே குடிநீர் வழங்கப்படுவதாகவும், மீதமுள்ள 60 வீடுகளுக்கு கடந்த ஐந்து மாதங்களாக குடிநீர் விநியோகம் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதனால் பெண்கள் மற்றும் குழந்தைகள் அன்றாட தேவைக்கான குடிநீரைப் பெற தொலைதூர பகுதிகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பெரும் சிரமத்தை சந்தித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்த பிரச்சினை குறித்து பலமுறை ஊராட்சி நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், அதிகாரிகள் அலட்சியமாக பதிலளித்து வருவதாகவும் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

இதையடுத்து, பொரத்தூர் காலனியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பெண்கள் சமூக ஆர்வலர்கள் முத்து, சிவா, நாகராஜ் ஆகியோர் தலைமையில் காலி குடங்களுடன் பாலக்கோடு வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சென்று, வட்டார வளர்ச்சி அலுவலர் சர்வோத்தமனை நேரில் சந்தித்து கோரிக்கைமனுவை அளித்தனர். அந்த மனுவில், உடனடியாக குடிநீர் விநியோகத்தை சீரமைக்க வேண்டும், கடந்த ஐந்து மாதங்களாக குடிநீர் வழங்காததற்கான காரணத்தை விசாரிக்க வேண்டும், அலட்சியமாக செயல்படும் ஊராட்சி நிர்வாகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். மனுவை பெற்றுக்கொண்ட வட்டார வளர்ச்சி அலுவலர் சர்வோத்தமன், புகார் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தி, குடிநீர் வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார். அதிகாரியின் உறுதிமொழியை ஏற்று பொதுமக்கள் அங்கிருந்து சென்றனர்.

# இன்று முதல் 12 நாட்கள் நடக்கிறது; ஈரோட்டில் நடக்கும் புத்தக திருவிழாவில் 3 அமைச்சர்கள் பங்கேற்பு

## ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தகவல்



ஈரோடு ஜூலை 31

ஈரோடு சிக்கய்ய நாயக்கர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் ஈரோடு புத்தகத் திருவிழா மாவட்ட நிர்வாகம் மற்றும் மக்கள்சிந்தனைப் பேரவை சார்பில் வருகிற 31 ந் தேதி முதல் 12 நாட்கள் நடக்கிறது. 22வது ஆண்டாக நடக்கும் இந்த புத்தகதிருவிழா குறித்து ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி கூறியதாவது

ஈரோடு புத்தகத் திருவிழா இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு கல்லூரி மைதானத்தில் தொடங்குகிறது . தொடக்க விழாவில் வருவாய்த் துறை அமைச்சர் கே ஏ செங்கோட்டையன் பள்ளிக்கல்வி தமிழ் வளர்ச்சி செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜமோகன் கைத்தறி துணி நூல் மற்றும் காதித் துறை அமைச்சர் விஜய் பாலாஜி ஆகியோர் இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புத்தகம் திருவிழா நடக்கும் அரங்கம் மற்றும் புத்தக கண்காட்சியை திறந்து வைத்து பேசுகிறார்கள். இந்த நிகழ்ச்சிக்கு கலெக்டர் கந்தசாமி தலைமை தாங்குகிறார். மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் ஸ்டாலின் குலசேகரன் வரவேற்று பேசுகிறார் .பொது நூலக இயக்ககம் இயக்குனர் ஜெயந்தி ,பத்ம பூசன் விருதாளர் எஸ் .கே .எம் மயிலானந்தன் எம் .எல் .ஏ.க்கள் ஆனந்தமோகன், சண்முகம், முதன்மை கல்வி அலுவலர் மான்விழி, பிரகாஷ் எம் .பி, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அரவிந்த் ஜெயின், ஈரோடு மாவட்ட நூலக அலுவலர் ராஜேந்திரன் மற்றும் பலர் முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகிறார்கள். நிகழ்ச்சியையொட்டி இன்று முதல் நிகழ்ச்சி முடியும் வரை தினமும் மாலை 6 மணிக்கு சிறப்பு சொற்பொழிவுகள் நடக்கிறது

இவ்வாறு அவர் கூறினார். அருகில் மக்கள் சிந்தனைப்பேரவைதலைவர் ஸ்டாலின் குணசேகரன் உள்ளார்.

# டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும்

## ஆர்ப்பாட்டம் துரை சந்திரசேகரன் எம்எல்ஏ தலைமையில் நடந்தது

தஞ்சாவூர் ஜூலை 31

தஞ்சாவூர்டெல்டாமாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என திருவையாற்றில் நடந்த ஆர்ப்பாட்ட த்தில் துரை சந்திரசேகரன் எம்எல்ஏ தலைமையில் நடந்தது



தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாறு நகரதிமுக சார்பில் அனைத்து விவசாயிகளின் விவசாய பயிர் கடன்களை ரத்து செய்யா ததை கண்டித்தும் விவசாயிகளுக் கு குறுவை சாகுபடிக்கு பயிர் கடன் வழங்காத த.வெ.கஅரசை கண்டித்தும் ,திருவையாறு கிராம கூட்டுறவு வங்கி முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது ஆர்ப்பாட்டத்திற்கு திமுக மத்திய மாவட்ட செயலாளர் துரை சந்திரசேகரன் எம்எல்ஏ தலைமை தாங்கி னார்அப்போது அவர்கூறியதாவது தற்போதைய தமிழக முதலமைச்சர் விஜய் தேர்தலுக்கு முன்பு பயிர் கடனை முழுவதும் முழுமை யாக ரத்து செய்வேன் என்றார். ஆட்சிக்கு வந்த பிறகு சொன்னதை செய்யவில்லை .ஒரு வீட்டுக்கு ஒருத்தருக்கு தான் கடன் தள்ளுபடி அரசாங்க வேலையில் இருந்தா லோ அல்லது வங்கி ஊழியராக இருந்தாலோ அல்லது விவசாயியாக இருந்தாலும் நிச்சயமாக அந்த கடனை தள்ளுபடி செய்ய முடியாது என்று சொல்கின்றதமிழகஅரசை வன்மையாக கண்டிக்கிறோம். பயிர் கடனை முழுமையாக தள்ளு படி செய்ய வேண்டும் என்று கேட்டு க் கொள்கின்றோம் , தொடர்ந்து வறட்சி நிலவி வருகிறது .சம்பா சாகுபடியும் இருக்காது .எனவே காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும்

ஏரி ,குளங்கள் எல்லாம் தூர்வாரி ஆழப்படுத்துகின்ற பணிகளை விவசாய தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் .திமுக சார்பில் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தி தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கிறோம் .தஞ்சையில் மிகப் பெரிய அளவில் நம்முடைய சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்கின்ற ஒரு கண்டன ஆர்ப்பாட்டம் விவசாயிகள் சார்பாக நிச்சயமாக நடைபெறும். அந்த ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார் ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய செய லாளர்கள் சிவசங்கரன், அரசாபகரன், கவுதமன், நகர சபை தலைவர் கஸ்தூரி நாகராஜன், துணைத்தலைவர் நாகராஜன், மேல திருப்பந்துருத்தி போரூர் செயலாளர் அகமது மைதீன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



# தருமபுரி அருகே தனியார் கல்லூரியில் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு

## போட்டிகள் ஏராளமன மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்பு

தருமபுரி ஜூலை 31
தருமபுரி மாவட்டம் மாட்லாம்பட்டி தனியார் கல்லூரியில் இந்திய அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், தருமபுரி மை பாரத் கேந்திரா மற்றும் தனியார் கல்லூரி சார்பில் நாஷா முக்த் யுவா விக்சித் பாரத் போதைப்பொருள் இல்லாத இந்தியா என்ற கருப்பொருளில்,போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு போட்டிகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மரகதம் வெற்றிவேல் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். தொடர்ந்து போதைப் பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். நிகழ்ச்சியில் குழு நடன நிகழ்ச்சி, ஓவிய போட்டி, பேச்சுப்போட்டி, விவாத போட்டி, போன்ற பல்வேறு போட்டிகள் போதைப் பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், போதைப் பொருள் இல்லாத வாழ்க்கை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்றது. இந்த போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு மை பாரத் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மை பாரத் தருமபுரி அலுவலக பணியாளர் முனியப்பன், அதியமான் டிவி நிறுவனர் கபில்தேவ், மை பாரத் தேசிய இளைஞர் தொண்டர்கள் வெங்கடேஷ், பாவல் ராஜ், விக்னேஸ்வரி, ரேவதி, ராதா, முருகன், சௌமியா, கிருஷ்ணதேவன், சௌமியா, முருகன், பெருமாள், மோகன், ஜோதிமணி, பிரணவ் ராஜ், மாலினி, அம்பிகா, பாலாஜி, பசுபதி, சுகன்யா, கீதா ஐயன்துரை, சமூக ஆர்வலர் ஞான வேல், விஷ்ணு, ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் வெற்றி விழா கொண்டாட்டங்கள் !!



ஈரோடு ஜூலை 31
டெல்லியில் மாணவர்கள் இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி இந்திய முழுவதும் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட இந்திய மாணவர் சங்கம் இந்திய ஜனநாயக வாலிபர் சங்க தோழர்களுக்கு வெற்றி விழா ஈரோட்டில் SFI அலுவலகம் முன்பு நடைபெற்றது.

SFI மாவட்ட செயலாளர் த.நவீன் தலைமையில், பாடல்கள் முகமது அப்சர்,கராத்தே கார்த்திகேயன் கலை நிகழ்வுகள் நடைபெற்றது.

SFI மாநில செயலாளர் தோழர் சம்சீர் அகமது, SFI முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர் P.மாரி முத்து ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

DYFI மாவட்ட செயலாளர் VA விஸ்வநாதன் கலந்து கொண்டார். ஈரோடு மாவட்ட போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு தோழர்கள் TNUEF P.P.பழனிச்சாமி, CITU P.சுந்தர்ராஜன், CWFI நடராஜ், TNUEF N.பாலசுப்பிரமணி, AIDWA B.லலிதா ஆகியோர் பரிசுகள் வழங்கினார்கள். நன்றியுரையாக DYFI மாவட்ட பொருளாளர் அன்பு ஜனாதிபதி பேசினார்.



கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியில், கலை பண்பாட்டுத் துறை சார்பாக, 16 கலைஞர்களுக்கு கலை முதுமணி, கலை நன்மணி, கலை சுடர்மணி, கலை வளர்மணி, கலை இளமணி விருதுகள் மற்றும் ரூ.1 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பில் பரிசுத்தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.ச.கீர்த்தனா மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ்குமார் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் .பா.முகுந்தன் ஆகியோர் முன்னிலையில் வழங்கி பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார். உடன், சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் .சு.சங்கரராமன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# மகளிர் சுகாதார வளாகம் தனிநபர் ஆக்கிரமிப்பு



திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம், அருகே உள்ள ஆத்துப்பாக்கம் ஊராட்சியில் எட்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர், மேலும் அரியப்பாக்கம், அருகில், புகழ் பெற்ற ஸ்ரீ பவானி அம்மன் கோயில் அமைந்துள்ளது இந்த கோயிலுக்கு, வரும் பெண்கள் பக்தர்களுக்கு என தனி சுகாதார குளியல் அறை வளாகம் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டன.

ஆனால் அதனை அப்பகுதியில் உள்ள தனிநபர்கள் மகளிர் சுகாதார குளியல் அறை, மற்றும் ஆண்கள் குளியல் அறை என இரண்டாக பிரித்து பயன்படுத்தி வந்தாக கூறப்படுகிறது,

இந்நிலையில், தனி நபர்களுக்கான டெண்டர் கடந்த சில நாட்களுக்கு முன்பு முடிந்த நிலையில் அரியப்பாக்கத்தில் உள்ள 21 மகளிர் பெண்கள் குழு வட்டார வளர்ச்சி அலுவலரை நேரில் சந்தித்து, மகளிர் குழுவுக்காக கட்டப்பட்டுள்ள சுகாதார வளாகத்தை இனி நாங்களே நடத்திக் கொள்கிறோம் என அனுமதி கேட்டபோது வளாகத்தின் சாவி தனிநபர் ஒருவர் வைத்துக் கொண்டிருப்பதாகவும் அவர்களுக்கு இரண்டு லட்சரூபாய்பணம்கொடுத்தால் மட்டுமே சாவி கொடுப்பதாக கூறுகிறார்கள் என வட்டார வளர்ச்சி அலுவலர் கூறிய தாக மகளிர் பெண்கள் குழு மக்கள் தெரிவிக்கின்றன,

எனவே தனி நபர் வசம் இருக்கும் சுகாதார குளியல் அறை வளாகத்தை மகளிர் குழு பெண்களுக்கு டெண்டர் வழங்குமாறு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை , திட்ட இயக்குநர், அலுவலரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர், கோரிக்கை மனு பெற்றுக் கொண்ட அலுவலர் விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.



வாணியம்பாடி அடுத்த மேல்குப்பம் மற்றும் லாலா ஏரி பகுதிகளில் அளவுக்கு அதிகமான ஆழம் போட்டு சட்டவிரோதமாக டிப்பர் லாரிகள் மூலம் 500க்கும் மேற்பட்ட லோடுகள் மண் மற்றும் மணல் கடத்தல்

வாணிடெக் நிறுவனத்திற்கு பின்புறமாக இரண்டு ஏக்கர் பரப்பளவில் கொட்டப்பட்டு சமன் செய்வதற்காக கடத்தப்பட்டதாக அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு

மாவட்ட நிர்வாகம் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் நடவடிக்கைஎடுத்துசட்டவிரோதமண்மற்றும்மணல்கடத்தலை தடுத்து கனிம வள கொள்ளையர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை.




# நாகர்கோவிலில் விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய கேட்டு பாரதிய கிசான் சங்கம் ஆர்ப்பாட்டம்

நாகர்கோவில், ஜூலை. 31
தமிழக விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கவும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பல்வேறு கோரிக்கைகளை மத்திய மற்றும் மாநில அரசுகளின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் பாரதிய கிசான் சங்கம் (தமிழகம்) சார்பில் நேற்று நாகர்கோவிலில் கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழக அரசு தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி 5 ஏக்கருக்கு உட்பட்ட விவசாயிகளின் அனைத்து விவசாய கடன்களையும் எவ்விதநிபந்தனைமின்றி உடனடியாக முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். தமிழகம் முழுவதும் விளைநிலங்களுக்குள் வனவிலங்குகள் புகுந்து பயிர்களை சேதப்படுத்துவதை தடுக்க வனத்துறை மற்றும் தமிழக அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்து நிரந்தர கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். பசும்பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ 60 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும். விவசாய விளைபொருட்களுக்கு லாபகரமான விலை கிடைப்பது உறுதி செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேங்காய் எண்ணெயை உணவு எண்ணெயாக அரசு அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும். மத்திய அரசு தனது பட்ஜெட்டில் அறிவித்துள்ள கோக்கனட் ப்ரோமோஷன் ஸ்கீம் திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து சலுகைகளும் தடை இன்றி கடைக்கோடி விவசாயிகளுக்கும் கிடைப்பதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும். நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயத்துறை, உணவுத்துறை மற்றும் வருவாய் துறையாகஇவற்றைஇணைத்து ஒரு கூட்டு மேலாண்மை அமைப்பை தமிழகம் முழுவதும் உருவாக்க வேண்டும். உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பு பூங்கா அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கன்னியாகுமரி, தென்காசி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர். இந்த போராட்டத்திற்கு பாரதிய கிசான் சங்கத்தின் கன்னியாகுமரி மாவட்ட தலைவர் ராஜேஷ் குமார் தலைமை தாங்கினார். மாவட்டம் பொருளாளர் ராமதாஸ், மாநில தலைவர் பார்த்தசாரதி, மாநில செயலாளர் முருகன், மாநில அமைப்பாளர் குமார், தென்காசி மாவட்ட தலைவர் ஹரிரங்கநாதன், சிவனயா, பெரியசாமி, ராமர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# ஏ பி ஜே அப்துல் கலாம் நினைவு தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா

கோவை ஜூலை:31
டாக்டர் ஏ பி ஜே அப்துல் கலாம் நினைவு தினத்தை முன்னிட்டு ஜனடிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 சி நேரு நகர் லயன்ஸ் சங்கம் இணைந்து ஈச்சனாரி பாலக்காடு சாலையில் உள்ள நிறுவனத்தின் மைதானத்தில் 100கும் மேற்பட்ட பலவகை மரங்களை செந்தமிழ் அறக்கட்டளை கனகசுப்பிரமணி மரம் யோகநாதன் உறுப்பினர் பெருக்கம் மாவட்ட தலைவர் லயன் எஸ் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு ஜெயமோகன் மற்றும் கோபிநாத்,ஐஎஸ்ஓ சான்றிதழ் பொறுப்பு பால் கண்ணன்,நிர்வாகத் துறை சரவணன்,இயக்க மேலாண்மை தலைவர் சுரேஷ்,மனித வளம் மல்லிகாஜி எம் ஏ முத்துசாமி ஆகியோர் மரங்களை நட்டு துவக்கி வைத்தனர். இருபதுக்கு மேற்பட்ட ஜனடிக்ஸ் ஊழியர்கள் உடன் இருந்தனர்.

# கன்னியாகுமரியில் சுகாதார விதிமீறல்: 17 உணவகங்களுக்கு ரூ.1.5 லட்சம் அபராதம்

கன்னியாகுமரி, ஜூலை 31
குமரி மாவட்டத்தில் சுகாதார விதிமுறைகளை மீறி செயல்பட்ட 17 உணவகங்களுக்கு மொத்தம் ரூ.1.5 லட்சம் அபராதம் விதித்து உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்

கன்னியாகுமரிமாவட்ட கலெக்டர் பிரதாப் உத்தரவின்படி, மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை நியமன அதிகாரி ஜெயராமபாண்டியன் தலைமையிலான குழுவினர் கடந்த இரண்டு நாட்களாக உணவகங்கள், பேக்கரிகள், மளிகைக் கடைகள், இறைச்சிக் கடைகள் மற்றும் தேநீர் விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு நடத்தினர்.

இதில் கன்னியாகுமரி சன்னதி தெரு, மெயின் ரோடு, காந்தி மண்டபம் ரோடு உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற சோதனையில், சுகாதார சீர்கேட்டுடன் செயல்பட்ட 6 உணவகங்களுக்கு தலா ரூ.10,000 அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்திய 3 உணவகங்களுக்கு தலா ரூ.5,000 அபராதம் விதிக்கப்பட்டது.

நாகர்கோவில் பேருந்து நிலையங்களில் உள்ள உணவகங்கள் மற்றும் தேநீர் கடைகளில் நடத்தப்பட்ட ஆய்வில், 7 உணவகங்களுக்கு தலா ரூ.10,000 மற்றும் ஒரு உணவகத்திற்கு ரூ.5,000 அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த 13 உணவகங்ளுக்கு மொத்தம் 1லட்சத்து 30 ஆயிரம் ரூபாய், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் கவர்களை பயன்படுத்தி சூடான உணவுப் பொருட்களைபார்சல்செய்தநான்கு உணவுகளுக்கு ரூ. 20,000 என மொத்தம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வரும் உணவு நிறுவனங்கள் முதன்முறை தவறு கண்டறியப்பட்டால் ரூ.10,000, இரண்டாவது முறை கண்டறியப்பட்டால் ரூ 15 ஆயிரம், 3வது முறை கண்டறியப்பட்டால் ரூ. 20,000 அபராதத்துடன் உணவு பாதுகாப்பு பதிவு சான்றிதழ் ரத்து செய்யப்படும்.

இது போன்ற சோதனைகள் மாவட்டத்தில் உள்ள அனைத்து உணவு வர்த்த நிறுவனங்களிலும் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் இதுகுறித்த புகார்களுக்கு வாட்ஸ் எண் 9444042322 என்ற எண்ணிற்கு புகார் அளிக்கலாம் என மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அதிகாரி ஜெயராம் பாண்டியன் தெரிவித்தார்.

# அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தில் விடுபட்ட குளங்களையும் இணைக்க வேண்டுமென திருப்பூர் விவசாயிகள் நல முன்னேற்ற சங்கம் குறைகேட்பு கூட்டத்தில் வலியுறுத்தல்



திருப்பூர் ஜூலை 31,,
மாவட்ட அளவிலான மாதாந்திர விவசாயிகள் குறைத்தீர்ப்பு கூட்டம் திருப்பூர் ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் மதிப்புக்குரிய மருத்துவர்.நாரணவரே மனீஷ் சங்கர் ராவ் தலைமையில் நடைபெற்றதில் திருப்பூர் விவசாயிகள் நல முன்னேற்ற சங்க தலைவர் ஈ.பி.அ.சரவணன் அளித்துள்ள மனுவில்...

அத்திக்கடவு – அவிநாசி திட்டம் மூலம் பல்வேறு கிராமங்களில் உள்ள நீர்நிலைகள் நிரம்பி, நிலத்தடி நீர்மட் டம் உயர்ந்து விவசாயம் புத்துயிர் பெற்று வருகிறது. எனினும், இத்திட்டத்தின் பயன்கள் முழுமையாக கிடைக்க விடுபட்ட குளங்களையும் இணைக்க வேண்டும்தற்போது முக்கிய குளங்களுக்கு நீர் சென்றாலும், ஏராளமான சிறிய, நடுத்தர அளவிலான குளங்கள் மற் றும் குட்டைகள் இத்திட்டத்தில் விடு பட்டுள்ளன.

இவற்றையும் இணைத்தால், மழைக்கால உபரி நீரை முழுமையாகச் சேமித்து, கூடுதல் கிராமங்கள் பயன்பெற வழியேற்படும். திருப்பூர் மாவட்டம் வடக்கிலுள்ள பெருமாநல்லூர் பகுதியிலுள்ள ஈட்டிவீரம்பாளையம் கிராமத்திலுள்ள, முட்டியங்கிணறு குட்டைக்கு கடந்த ஆண்டு ஒரு சொட்டு தண்ணீர் கூட வரவில்லை.

சொக்கனூர் கிராமம், பட்டம்பாளையம் ஊராட்சியிலுள்ளகுட்டைகளுக்கு மிக குறைந்தளவில் மட்டுமே தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

இந்தாண்டிலாவது நூறு சதவீத தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்எனவே அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை வெறும் நீர் நிரப்பும் திட்டமாக மட்டுமின்றி, நிலத்தடி நீர் மட்டம் உயரவும், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டமாக மாற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென திருப்பூர் விவசாயிகள் நல முன்னேற்ற சங்கம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதில் திருப்பூர் விவசாயிகள் நல முன்னேற்ற சங்க தலைவர் ஈ.பி.அ.சரவணன், நிர்வாகி பாலகுமார், கேஏகே. கிருஷ்ணசாமி, வஞ்சிபாளையம் துரை, விவசாய சங்க பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள்,விவசாயிகள், அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மணக்குடியில் பாதுகாப்பு கவசம் இல்லாமல் படகில் ஆபத்தான பயணம் மேற்கொண்ட மாணவிகள் வீடியோ வைரல்

நாகர்கோவில், ஜூலை.31
மணக்குடி அருகே பள்ளி மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் எவ்வித பாதுகாப்பு ஊரணங்கள் இன்றி ஆபத்தான முறையில் கடலில் பயணம் செய்யும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவியதால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

குமரி மாவட்டத்தில் கடலோர பகுதிகள் மற்றும் ஏரி பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளும், மாணவர்களும் படகு சவாரி செய்வது வழக்கம். மணக்குடி அருகே உள்ள ஒரு பகுதியில் ஒரு பள்ளி மாணவிகள் குழுவினர் தங்களது ஆசிரியர்களுடன் 2 படகுகளில் பயணம் செய்துள்ளனர். இந்த வீடியோவை உற்று நோக்கும்போது 2 படகில் பயணம் செய்த ஒரு மாணவி கூட லைப் ஜாக்கெட் எனப்படும் உயிர் காக்கும் கவசத்தை அணியவில்லை என்பது தெரிய வந்துள்ளது. ஆசிரியர்களும் எந்த விதமான பாதுகாப்பும் இன்றி இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

கடல் அல்லது ஏரி பகுதிகளில் நிலவும் நீரோட்டம் மற்றும் திடீரென எழும் அலைகளால் படகு நிலை குலைந்து கவிழ்ந்தால் நீச்சல் தெரிந்தவர்களே தப்பிப்பது கடினம். ஒரு சிறிய அலை மோதினால் கூட படகு கவிழ்ந்து பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட வாய்ப்பு உள்ள சூழ்நிலையில், மாணவர்களில் பாதுகாப்பில் பள்ளி நிர்வாகமும் படகு இயக்குபவர்களும் காட்டியுள்ள இந்த அலட்சியம் பொதுமக்களிடையே கடும் கோபத்தை ஏற்படுத்தி உள்ளது.

சட்டப்படி பயணத்தின் போது ஒவ்வொருவரும் கண்டிப்பாக லைப் ஜாக்கட் அணிய வேண்டும் என்பது கட்டாயமாகும். மேலும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை விட அதிகமான நபர்களை ஏற்றுவது, படகின் ஓரங்களில் அமர்ந்து பயணம் செய்வது போன்றவை சட்டவிரோதமானது. மற்றும் உயிருக்கு ஆபத்தானவை ஆகும். ஆனால் இந்த படகில் அனைத்து விதிமீறல்களும் நடந்துள்ளது.

பள்ளி சுற்றுலா அல்லது கல்விசார் களப்பணிகள் என எதற்காக அழைத்து சென்றாலும் மாணவிகளின் மாணவர்களின் பாதுகாப்பிற்கு தான் முதல் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். எனவே இந்த சட்ட விரோத மற்றும் ஆபத்தான படகு பயணத்திற்கு காரணமான படகு உரிமையாளர் மீதும், அலட்சியமாக செயல்பட்ட பள்ளி நிர்வாகம் மீது மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் உடனடியாக விசாரணை நடத்தி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், வருங்காலங்களில் இது போன்று சுற்றுலாத்தலங்களில் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் எனவும் கோரிக்கை எழுந்துள்ளது.

# குமரி அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி வளாகத்தில் ஆட்டோவை உடைத்து ரூ.8,400 திருட்டு

நாகர்கோவில், ஜூலை. 31
கருங்கல் அருகே உள்ள மூசாரி என்ற பகுதியை சேர்ந்தவர் தவசிமணி (48). ஆட்டோ டிரைவர். இவர் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தனது உறவினரை பார்ப்பதற்காக ஆட்டோவில் சென்றார்.அவசரசிகிச்சை பிரிவு அருகே உள்ள விநாயகர் கோயில் பின்புறம் ஆட்டோவை நிறுத்திவிட்டு உறவினரை பார்க்க சென்றுள்ளார்.

பின்னர் அவர் திரும்பி வந்த போது ஆட்டோவில் உள்ள டிராஸ் பாக்ஸ் உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார். இது குறித்து அவர் உடனடியாக ஆசாரிப்பள்ளம் போலீசில் புகார் அளித்தார். அதில் டிராஸ் பாக்ஸில்இருந்தரூ.8,400 திருட்டு போயிருப்பதாக புகாரில் கூறியிருந்தார். அதன் பேரில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ராஜன் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

மக்கள் நடமாட்டம் மிகுந்த குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ஆட்டோவை உடைத்து பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது. இதனை அடுத்து போலீசார் மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள கண்காணிப்பு கேமராகாட்சிகளைகைப் பற்றி ஆய்வு செய்து விசாரித்து வருகின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.